**OS.NO: 19/2024**

**PW 1 :** மகேஷ் த/பெ.இராஜேந்திரன்

நாள் : 09.10.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழின் தேதி 19.08.2025 என்று சொன்னால் அதற்கு முன்பு நான் இணையத்தின் வழியாக பார்த்திருந்தேன் குறுக்கு விசாரணையின் போது கேட்டதால் அந்த தேதியில் நான் மீண்டும் பார்த்து அதனை ஆவணமாக எடுத்து வந்து தாக்கல் செய்துள்ளேன். கிரைய ஆவணத்திற்கு முன்பு பார்த்த வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய வருமான வரி கணக்கு வாதசாஆ.7ல் பிரதிவாதி என்னிடம் ரூ.1 கோடி கடன் வாங்கியதாக என்னுடைய வருமானத்தை குறைத்து காண்பிப்பதற்காக பொய்யாக வாங்காத கடனை கூறியுள்ளேன் என்று சொன்னால் கிரைய ஒப்பந்தத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ அந்த அடிப்படையில் தான் வருமான வரிக்கணக்கில் அந்த தொகையை கூறியுள்ளேன். பண பரிவர்த்தனையின் போது பிரதிவாதி என்வசம் 4 காசோலைகளை தலா ரூ.5 லட்சம் வீதம் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை. நான் பிரதிவாதியினுடைய சொத்தை மீட்பதற்காக ரூ.19 இலட்சம் செலவழித்தேன் என்றும் அதற்காக பிரதிவாதி என்னிடம் 4 காசோலைகளை தலா ரூ5 இலட்சங்களாக கொடுத்திருந்தார் என்று சொன்னால் அது பொய். பிரதிவாதி என்னிடம் ரூ.19,09,151/- தான் கடன் வாங்கியிருந்தார் என்றும் அதை தவிர வேறு எந்த பணமும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல RTGS மூலமாக சுந்தரம்

பைனான்ஸிற்கு பணத்தை அனுப்பிய பிறகு தான் ஆவணங்களை பிரதிவாதி வாங்கி என் வசம் ஒப்படைத்தார். பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பிரதிவாதி என் வசம் ரூ.1 கோடி பணம் என்னிடம் வாங்கவில்லை என்று சொன்னால் அது பொய்.

**மறு விசாரணை:** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.09 05:50:05 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.